**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி.சி. எண் : 153/2019**

**அ.சா : 1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. ஜெயா |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | சங்கர் |
| ஊர் | : | கண்ணன்டஅள்ளி |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | கூலி |
| மதம் | : | |
| வயது | : | 40 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 04.05.2023**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கண்ணன்டஅள்ளியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் பக்கத்து ஊரானா அத்திகானூரில் கோவில் திருவிழா நடைபெற்றது. அதனால் இரவு ஆடல் பாடல் நிகழ்ச்சி நடைபெற்றதை பார்ப்பதற்காக 08.30 மணிக்கு மேல் வீட்டை பூட்டி விட்டு சென்றேன். நிகழ்ச்சி முடித்து வந்து பார்த்த போது வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டும், கதவு உடைக்கப்பட்டும், பீரோ உடைக்கப்பட்டும், துணி மணிகள் சிதறியும் காணப்பட்டன. பீரோவில் வைத்திருந்த அட்டிகை 5 பவுன் ஒன்றும், மாட்டல் ஒரு ஜோடி 2 பவுன் ஒன்றும், செயின் ஒன்று சுமார் 3 1/2 சவரன் கொண்டதும் காணாமல் போயிருந்தது. பிறகு இது குறித்து மத்தூர் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது. புகார் நான் அளித்தது தான். **புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிறகு காணாமல் போன நகைகள் கிடைத்ததாக போலீசார் தகவல் தந்தார்கள். காவல் நிலையம் சென்று நகைகளை அடையாளம் காட்டினேன். பிறகு காணாமல் போன நகைகளை நீதிமன்றம் மூலம் பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள

நகைகள்தான் எனது வீட்டிலிருந்து காணாமல் போய் திரும்ப கிடைத்தவை. **புகைப்படம் (குறுந்தகடுடன்) அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

திருடு போனவுடன் 17.02.2019 ஆம் தேதி புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்தை அன்று தான் போட்டேன். மறுபடியும் போலீசார் என்னிடம் வேறு கையெழுத்து கேட்டார்களா என்றால் நகை கிடைத்துவிட்டது வந்து பார்க்க சொன்னார்கள். வீட்டில் திருடு போன நகைகள் பழைய நகைகள் என்று சொன்னால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து எனக்கு வேறு நகைகள்தான் கொடுத்தார்கள். வேறு நகைதான் அ.சா.ஆ. 2 புகைப்படத்தில் உள்ள நகைகள் என்றால் சரிதான். நகைகளை யார் திருடி சென்றார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி. எண் : 153/2019**

**அ.சா : 2**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. இராஜ்குமார் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | சங்கர் |
| ஊர் | : | கண்ணன்டஅள்ளி |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | தனியார் நிறுவனம் |
| மதம் | : | |
| வயது | : | 29 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 04.05.2023**

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கண்ணன்டஅள்ளியில் வசித்து ஷூ கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா. மூன்று வருடங்களுக்கு முன்பு பிப்ரவரி மாதம் 17 ஆம் தேதியன்று இரவு எனது அம்மா அத்திகானூருக்கு பாட்டு கச்சேரிக்கும், நான் எனது நண்பர்களுடன் ஊரில் வீட்டை பூட்டி விட்டு சென்றுவிட்டு மீண்டும் இரவு 10.00 மணிக்கு மேல் வீட்டிற்கு வந்த போது வீட்டிற்குள் பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது. உள்ளே சென்று பார்த்த போது பீரோ உடைக்கப்பட்டிருந்தது. பீரோவில் இருந்த எனது அம்மாவின் நகைகள் திருடு போயிருந்தது தெரியவந்தது. பிறகு இது குறித்து மத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். காணாமல் போன நகைகள் திரும்ப கிடைத்துவிட்டதாகவும், அதனை நீதிமன்றம் மூலம் பெற்று கொண்டதாகவும், நான் வெளியில் இருந்த போது எனது அம்மா தகவல் சொன்னார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு நகை எந்த தேதி, வருடம் காணாமல் போனது என்று தற்போது நினைவில் இல்லை. நகை திருடு போனதாக சொல்லப்படும் தினத்தில் நான் எனது

வீட்டில் இல்லை. நான் அப்போது பள்ளிக்கூடத்தில் இருந்தேன். நகையை யார் எடுத்து போனார்கள் என்று எனக்கு தெரியாது. எனது தாயார் அன்றிரவே காவல் நிலையத்திற்கு தொலைபேசி மூலம் தகவல் சொன்னார். மறுநாள் புகார் கொடுத்தார்.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V
SHANMUGANATHAN

District Munsif cum Judicial
Magistrate
Digitally signed by S V
SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி.சி. எண் : 153/2019**

**அ.சா : 3**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. லலிதா |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | பிரபாகரன் |
| ஊர் | : | கண்ணன்டஅள்ளி |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | TNPSC, Chennai. Data Entry Operator |
| மதம் | : | |
| வயது | : | 26 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 04.05.2023**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னையில் வசித்து தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தில் Data entry Operator ஆக வேலை செய்து வருகிறேன். எனது சொந்த ஊர் கண்ணன்டஅள்ளி ஆகும். அ.சா.1 எனது தாயார். அ.சா.2 எனது அண்ணன். கடந்த 19.02.2019 ஆம் தேதி நான் சென்னையில் இருந்த போது எனது அம்மா எனக்கு தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு நகைகள் திருடு போன விவரத்தை தெரிவித்தார். சம்பவ தினத்தன்று எனது தாயார் அத்திகானூர் கிராமத்திற்கு கோவில் திருவிழாவிற்கு சென்றுவிட்டார். எனது அண்ணன் தனது பிறந்தநாள் என்பதால் நண்பர்களுடன் வெளியே சென்று விட்டார். நான் அன்றைய தினம்தான் ஊரிலிருந்து கிளம்பி சென்னைக்கு காலையில் சென்றேன். எனவே சம்பவத்தின்போது வீட்டில் யாரும் இல்லை. வீட்டிலிருந்து செயின், அட்டிகை, மாட்டல் ஆகியவை திருடு போயிருந்தன. இது குறித்து எனது அம்மா காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அ.சா.ஆ. 2 புகைப்படத்தில் காட்டப்படும் நகைகள்தான் எங்கள் வீட்டிலிருந்து திருடு போன நகைகள் ஆகும். காணாமல் போன நகைகள் மீண்டும் கிடைத்துவிட்டதாக எனது தாயார் தொலைபேசி மூலமாக தகவல் சொன்னார். அதை நீதிமன்றம் மூலமாக

பெற்றுக்கொண்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தாலிக்கொடி, அட்டிகை, மாட்டல் ஆகிய நகைகள் வீட்டிலிருந்து திருடு போனதாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். போலீசார் திருடு போன இரண்டு நாட்கள் கழித்து என்னை விசாரணை செய்தார்கள்.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.

## (அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

**சி.சி. எண் : 153/2019**

**அ.சா : 4**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. முத்தம்மாள் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | சரவணன் |
| ஊர் | : | கண்ணன்டஅள்ளி |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | தூய்மை பணியாளர் |
| மதம் | : | |
| வயது | : | 43 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 04.05.2023**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கண்ணன்டஅள்ளியில் வசித்து தூய்மை பணியாளராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரர். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் அ.சா.1 பக்கத்து ஊர் திருவிழாவிற்கு சென்று விட்டு வீட்டிற்கு வந்த போது அவருடைய வீட்டில் பூட்டு உடைக்கப்பட்டு, பீரோ உடைக்கப்பட்டு நகை பணம் திருடு போனதாக கூச்சம் சத்தம் கேட்டு போய் பார்த்த போது தெரியவந்தது. இது குறித்து அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 வீட்டிலிருந்து 3 வீடுகள் கழித்து எனது வீடு உள்ளது. திருடு போன அன்றே போலீசாருக்கு தகவல் சொன்னார்கள். மறுநாள் காலை போலீசார் வந்து விசாரணை செய்தார்கள். என்னையும் அன்றே விசாரணை செய்தார்கள். நகையை யார் திருடினார்கள் என்று தெரியாது. கேள்விப்பட்டுதான் சாட்சி சொல்கிறேன். தாலிக்கொடி திருடு போனதாக சொன்னார்கள் என்றால் சரிதான்.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி.சி. எண் : 153/2019**

**அ.சா : 5**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. கிருஷ்ணன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | குல்லி வெங்கட்டப்பன் |
| ஊர் | : | கண்ணன்டஅள்ளி |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | கூலி |
| மதம் | : | |
| வயது | : | |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 04.05.2023**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கண்ணன்டஅள்ளியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.3 வரை ஆகியோரை தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு அ.சா.1 ன் வீட்டில் இரவு நேரத்தில் நகை திருடு போனதாக கேள்விப்பட்டேன். போலீசார் நகை திருடு போன அ.சா.1 ன் வீட்டிற்கு வந்தார்கள். போலீசார் கேட்டுக்கொண்டதால் கைரேகை செய்து கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகேட்டு குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு நகை திருடு போனது சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றால் சரிதான். பீரோவில் இருந்த நகை காணாமல் போயிருந்தது என்று சொன்னால்சரிதான். ஜெயா வீடு எங்கு உள்ளது என்றும் வீட்டை சுற்றி யார், யார் உள்ளார்கள் என்றும் குறித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு படம் வரைந்ததற்காகவும், மகஜர் தயார் செய்தவற்காகவும் கையெழுத்து பெற்றார்கள் என்றால்

சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

17.02.2019 ஆம் தேதி ஜெயா வீட்டில் நகை திருடு போனது சம்மந்தமாக அன்று காலை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். அப்போது பார்வை மகஜரில் ரேகையை போட்டேன் என்றால் சரிதான். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதின் பேரில் கைரேகை செய்தேன் என்றால் சரிதான். அதற்கு பின்பு போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.